**பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 72.91 அடி**

First Published : 13 Feb 2012 10:58:36 AM IST

ஈரோடு, பிப்.12: பவானிசாகர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை 72.91 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 968 கன அடி வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 600 கனஅடியும், வாய்க்காலில் 2,300 கன அடியும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர் இருப்பு 12.22 டி.எம்.சி.

**திருந்திய நெல் சாகுபடியில் உற்பத்தி அதிகரிக்கும்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2012,00:50 IST

கருத்தை பதிவு செய்ய

திருவள்ளூர் :""திருந்திய நெல் சாகுபடி முறையின் கீழ், பயிர் செய்தால், உற்பத்தி அதிகரிப்பதோடு, இடுபொருட்கள் செலவும் குறையும்," என, திரூர் நெல் ஆராய்ச்சி மையத் தலைவர் தெரிவித்தார்.

திரூர் நெல் ஆராய்ச்சி நிலையத்தில், திருந்திய நெல் சாகுபடி குறித்து, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில், உலக வங்கி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வரும் நீர்வள, நிலவளத் திட்டத்தின் கீழ், ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இப்பயிற்சியில், அடையாறு உபவடிவ நீர்ப்பகுதியை சேர்ந்த விவசாயிகள், 100 பேர் கலந்து கொண்டனர்.

நெல் ஆராய்ச்சி நிலையத்தின் தலைவர், மாணிக்கம், பயிற்சியை துவக்கி வைத்து பேசும்போது, "வழக்கமான சாகுபடியின் மூலம், பயிர் செய்வதை விட, திருந்திய நெல் சாகுபடி முறையின் மூலம்

பயிர் செய்தால், உற்பத்தி அதிகரிக்கும். இம்முறையில் விவசாயம் செய்வதால், குறைந்த அளவு உரம், தண்ணீர் ஆகியவை மட்டுமே தேவைப்படும்.
இடுபொருட்களுக்கான தேவை குறையும். ஒருமுறை இம்முறையின்படி, விவசாயிகள் பயிர் செய்தால், பின், இதை கைவிடமாட்டார்கள்' என்றார்.
திருந்திய நெல் சாகுபடியில் நாற்றங்கால் தயாரிப்பு, சதுர முறை நடவு, கோனோவீடர் கருவியின் இடையுழவு மேற்கொள்வது மற்றும் நடவு வயல் மேலாண்மை குறித்து, அவர் விவசாயிகளுக்கு எடுத்துரைத்தார். திருந்திய நெல் சாகுபடியின் முக்கியத்துவம் மற்றும் இம்முறையின் படி எவ்வாறு பயிர் சாகுபடி செய்வது என்பது குறித்து விளக்கினார்.
பின், விவசாயிகள் அனைவரும் திருமழிசையில் உள்ள விவசாயி ஒருவரது வயலுக்கு அழைத்துச் செல்லப்பட்டு, கோனோவீடர் கருவியின் மூலம் இடையுழவு எவ்வாறு செய்வது என்பது குறித்து, நேரடி செயல் விளக்கம் மூலம் காண்பிக்கப்பட்டது. இப்பயிற்சியில், பேராசிரியர்கள் முரளிதரன், மணிமேகலை ஆகியோர் பங்கேற்றனர்.

**வாழைத்தார் விலை வீழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2012,00:24 IST

கருத்தை பதிவு செய்ய

கோபிசெட்டிபாளையம்: வாழைத்தார் விலை வீழ்ச்சியடைவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். கோபி வட்டாரத்தில் சில நாட்களாக வாழை அறுவடை மும்முரமாக துவங்கியுள்ளது. கோபி ஒழுங்கு முறை உற்பத்தி மற்றும் விற்பனையாளர் கூட்டுறவு சங்கத்தில் நடக்கும் ஏலத்துக்கு வாழைத்தார் வரத்து அதிகரித்துள்ளது. விலை வீழ்ச்சியடைவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.
கதளி கிலோ - 23.50 ரூபாய், நேந்திரம் - 21 ரூபாய், செவ்வாழை தார் - 430, தேன்வாழை - 320, பூவன்- 300, ரொபஸ்டிரோ - 280, ரஸ்தாளி - 275, பச்சைநாடன் - 210, மொத்தன் - 200 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. சென்ற வாரத்தை விட விலை கிலோவுக்கு ஒரு ரூபாய் வீழ்ச்சியடைந்துள்ளது.
வாழை விவசாயிகள் கூறியதாவது: கோபி சுற்று வட்டாரத்தில், 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் வாழை பயிரிடப்பட்டுள்ளது. திருச்சி வட்டாரத்திலும் வாழை அறுவடை துவங்கியுள்ளதால், வரத்து அதிகரித்து விட்டது. திருச்சி பகுதிக்கு வியாபாரிகள் செல்லத் துவங்கி விட்டனர். கோபி சங்கத்துக்கு வியாபாரிகள் வரத்து குறைந்ததால், விலை கிலோவுக்கு ஒரு ரூபாய் வீழ்ச்சியடைந்துள்ளது.
வாழை பயிரிடுவதில் ஏக்கருக்கு, 50 ஆயிரம் ரூபாய் முதல் 60 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. உரம் விலை பல மடங்கும், ஆள் கூலி இரு மடங்கும் உயர்ந்துள்ளது. ஆனால், விளை பொருட்களின் விலை மட்டும் வீழ்ச்சியடைந்து வருகிறது. சென்றாண்டு வாழையில் ஏற்பட்ட

நோய் தாக்குதலால் உற்பத்தியும் குறைந்துள்ளது. விவசாயிகள் பெரிதும் நஷ்டமடைந்துள்ளனர்.இவ்வாறு அவர் கூறினார்.

**விவசாயிகளுக்கு பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2012,02:05 IST

கருத்தை பதிவு செய்ய

சங்கரன்கோவில் : சங்கரன்கோவிலில் உப்போடை உபவடி நிலப்பகுதி விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

சங்கரன்கோவில் மற்றும் குருவிகுளத்தைச் சேர்ந்த நீர்வள நிலவள திட்டத்தின் கீழ் உப்போடை ஆற்றுப்பகுதி விவசாயிகள் 45 பேருக்கு வீரிய ஒட்டுரக காய்கறி பயிர்கள் சாகுபடி பயிற்சி மற்றும் வயல்வெளி பயிற்சி அளிக்கப்பட்டது. பயிற்சியை நெல்லை தோட்டக்கலை துணை இயக்குனர் ராஜன் ரவிச்சந்திரன் பயனாளிகளுக்கு வீரிய ஒட்டுரக காய்கறி விதைகளை வழங்கி தொடங்கி வைத்தார். சங்கரன்கோவில் தோட்டக்கலை உதவி இயக்குனர் உதுமான் வரவேற்றார். தோட்டக்கலை உதவி இயக்குனர்கள் ராஜாசிங், தமிழ்வேந்தன் ஆகியோர் நவீன சாகுபடி தொழில் நுட்பங்களை பற்றி விவசாயிகளுக்கு கூறினர். முடிவில் குருவிகுளம் தோட்டக்கலை உதவி இயக்குனர் ஜெயச்சந்திரன் நன்றி கூறினார்.

ஏற்பாடுகளை தோட்டக்கலைத்துறை சாத்தூரப்பசாமி, கட்டளைஉடையார், கைலாசம், வைகுண்டசாமி, லட்சுமணன் ஆகியோர் செய்திருந்தனர்.

**தர்பூசணி அறுவடை தீவிரம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 14,2012,03:17 IST

கருத்தை பதிவு செய்ய

பொங்கலூர் :தர்பூசணி அறுவடை சீசன் களை கட்டியுள்ளதால், மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரித்துள்ளது. இதனால், கொள்முதல் விலை சரிந்துள்ளது.

மூன்று மாதப்பயிரான தர்பூசணியை, பொங்கலூர் பகுதியை சேர்ந்த நூற்றுக்கணக்கான விவசாயிகள் சாகுபடி செய்திருந்தனர்.

கார்த்திகை பட்டத்தில் சாகுபடி செய்த தர்பூசணி பழங்கள், தற்போது அறுவடை செய்யப்பட்டு வருகின்றன.

கடந்த ஜன., மாதம் கிலோ ஏழு ரூபாய்க்கு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டது. தற்போது, அறுவடை சீசன் களை கட்டியுள்ளதால், புதிய காய் வரத்து அதிகரித்துள்ளது.

இதனால், விலை இறங்குமுகத்தில் உள்ளது.
தற்போது, ஒரு கிலோ நான்கு ரூபாய்க்கு விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படுகிறது.
சில்லறை விலையில், கடைகளில் 15 ரூபாய்க்கும், உழவர் சந்தையில் 10 ரூபாய்க்கும் விற்கப்படுகிறது.
தள்ளுவண்டி கடைகளில் ஒரு பிளேட் 10 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.
இந்தாண்டு பூச்சி நோய் தாக்குதல் மற்றும் தரமில்லாத விதைகள் போன்ற காரணங்களால், விவசாயிகள் எதிர்பார்த்த மகசூல் கிடைக்கவில்லை. இந்நிலை யில், கொள்முதல் விலை சரிந் துள்ளது, கவலையடைய செய்துள்ளது.

**தேங்காய் பருப்புக்கு கூடுதல் விலை : வே.பாளையம் விவசாயிகள் கோரிக்கை**
பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,23:58 IST

கருத்தை பதிவு செய்ய
வேலாயுதம்பாளையம்: "கொப்பரை தேங்காய் பருப்புக்கு கொள் முதல் விலையை உயர்த்த தமிழக அரசு முன் வர வேண்டும்' என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.
கரூர் மாவட்டத்தில் புகளூர், வேலாயுதம்பாளையம், நொய்யல், சேமங்கி, நடையனூர், மரவாபாளையம், தவிட்டுப்பாளையம், திருக்காடுதுறை உள்ளிட்ட 15க்கும் மேற்பட்ட பகுதிகளிலும், காவிரி கரையோர பகுதிகளிலும் புகளூர் பாசன வாய்க்கா ல் போன்ற பாசன நீர் மூலம் ஏழ ாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் தென்ணை மரங்கள் வைத்து சாகுபடி செய்து வருகின்றனர்.
வேலாயுதம்பாளையம் பகுதியில் தென்னை மரங்கள் பாசனத்திற்காக தனி தனி வாய்க்கால்கள் வெட்டப்பட்டு தண்ணீர் சூழ்ந்துள்ள பகுதிகளில் விளைவதால் இளநீர் இனிப்பாகவும் ருசியாகவும் இருக்கும். இதனால் உள்ளூர், வெளியூர் மற்றும் வெளி மாநிலங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால், விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. அதிக விலை மற்றும் சீசன் இல்லாத நேரங்களில் தேங்காயை உடைத்து காயவைத்து பருப்பை, எண்ணை நிறுவனங்களுக்கு விவசாயிகள் விற்று வந்தனர்.
இந்த நிலையில் கடந்த அக்டோபர் மாதத்தில் 15 கிலோ எடை டின் தேங்காய் எண்ணை 1, 250 ரூபாய்க்கு விற்றது. இதனால் தேங்காய் பருப்புக்கு கூடுதல் விலை கிடைத்தது. தேங்காய் பருப்பு ஒரு கிலோ 56 ரூபாய் வரை தரத்திற்கு ஏற்ற வகையில் விற்பனையானது. திடீரென 15 கிலோ எடை தேங்காய் எண்ணை டின் 1,000 ரூபாயாக குறைந்தது. இதனால் ஒரு கிலோ தேங்காய் பருப்பின் விலையும் 47 ரூபாயாக குறைந்தது.
இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "கொப்பரை மற்றும் பால் கொப்பரை உற்பத்தி செலவு அதிகரித்துள்ளது. தேசிய வேளாண்மை கூட்டுறவு விற்பனை நிறுவனம் மூலம் நடப்பாண்டில்

புதியதாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ள விலைக்கு கொப்பரை தேங்காய் கொள்முதல் செய்யப்படும் என தெரிகிறது. இந்த நிலையில் கடந்தாண்டு வெளி மார்க்கெட்டில் அதிகபட்சமாக கிலோ 71 ரூபாய் வரை விற்ற கொப்பரை தேங்காய்க்கு, தற்போது திடீரென விலைச்சரிவு ஏற்பட்டுள்ளது. எனவே, தென்னை விவசாயத்திற்கான ஆட்கள் கூலி, இடு பொருட்கள், உரம், மருந்துகள் விலை உயர்ந்துள்ள நிலையில், கொப்பரை குவிண்டாலுக்கு 65 ஆயிரம் ரூபாய் நிர்ணயம் செய்ய தமிழக அரசு முன்வர வேண்டும். மேலும், வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட சுற்றுப்புற விவசாயிகளின் நலன் கருதி, புகளூர் பகுதியில் நேரடி அரசு கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டும் என்றனர்.

**நெல் விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,23:20 IST

கருத்தை பதிவு செய்ய

சிதம்பரம் : பரங்கிப்பேட்டை ஒன்றிய பகுதி கிராமங்களில் வேளாண் துறை சார்பில் நெல் விதை உற்பத்தி குறித்து விவசாயிகளுக்கு பயிற்சியளிக்கப்பட்டது. வேளாண் உதவி இயக்குனர் மதிவாணன் வரவேற்றார். வேளாண் துணை இயக்குனர் சந்திரமோகன் பயிற்சியை துவக்கி வைத்தார். துணை வேளாண்மை அலுவலர் கிருஷ்ணன், விதைச் சான்று நடைமுறை பற்றி பேசினார்.

ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர்கள் செல்லதுரை, பிரான்சிஸ் செய்திருந்தனர். ஆனந்தன் நன்றி கூறினார். அதேப்போன்று குறியாமங்கலம், கொத்தட்டை, தில்லைவிடங்கன் உள்ளிட்ட பகுதிகளிலும் பயிற்சி நடந்தது.

**நிரம்பி வழியும் கோமுகி அணை ஆயக்கட்டு விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,23:30 IST

கருத்தை பதிவு செய்ய

கள்ளக்குறிச்சி : கோமுகி நதி முழுமையாக நிரம்பியுள்ளதால் ஆயக்கட்டு பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கள்ளக்குறிச்சி அடுத்த கச்சிராயபாளையம் அருகே கல்வராயன்மலை அடிவாரத்தில் கோமுகி அணை கட்டப்பட்டுள்ளது.

இதன் மூலம் நேரடியாக 6,000 ஏக்கர் நிலமும், மறைமுகமாக 4,000 ஏக்கர் நிலமும் பாசன வசதி பெற்று வருகிறது. இதனால் ஆயக்கட்டு பாசன நிலத்தில் மூன்று போகமும் நெல் விளைந்து இப்பகுதி வளமாக உள்ளது.

ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழை காலத்திலேயே இந்த அணையின் முக்கால் பங்கு அளவு

நீர் நிரம்பி விடுவது வழக்கம். வடகிழக்கு பருவ மழை தீவிரமாக பெய்யும் காலத்தில் பல முறை அணை நிரம்பி உபரி நீர் ஆற்றில் திறந்து விடப்படுகிறது.

கடந்த முறை வடகிழக்கு பருவ மழை விழுப்புரம் மாவட்டத்தில் போதிய அளவு பெய்யாதபோதும், கல்வராயன்மலையில் கனமழை பெய்து அணை பல முறை நிரம்பியது. தானே புயல் புதுச்சேரியில் கரையை கடந்தபோது காற்றின் வேகம் கல்வராயன்மலையில் மோதி தடுத்து நிறுத்தப்பட்டது. இதனால் மற்ற பகுதிகளை விட மலையில் அதிகளவில் கன மழை கொட்டி தீர்த்தது.

மழை அளவு அதிகமாக இருந்ததால் கோமுகி அணை மீண்டும் நிரம்பி வழிந்தது. கடந்த ஜனவரி முதல் வாரம் வரை அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றும் அளவுக்கு நீர் வரத்து இருந்தது. தற்போது அணையின் முழு கொள்ளளவான 46 அடிக்கு நீர் நிரம்பியுள்ளது.

இது ஆயக்கட்டு விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கோடையில் தண்ணீர் பஞ்சமின்றி நெல் பயிரிட போதிய நீர் அணையில் தேங்கியுள்ளதால் மிகுந்த நம்பிக்கையுடன், விவசாயிகள் சாகுபடி பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

**தர்மபுரியில் 14.7 டன் புளி ஏலம்: நேரடி விற்பனையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 13,2012,21:00 IST

கருத்தை பதிவு செய்ய

தர்மபுரி: தர்மபுரி மதிக்கோன்பாளையம் ஒழுங்கு முறை விற்பனை கூட்டத்தில் விவசாயிகள் நேரடி விற்பனை புளி ஏலத்தில் 14.7 டன் புளி விற்பனை நடந்தது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தர்மபுரி மதிக்கோன்பாளையம் ஒழுங்கு முறை விற்பனை கூடத்தில் இந்தாண்டு முதல் வாரம் தோறும் ஞாயிற்று கிழமைகளில் விவசாயிகள் கொண்டு வரும் புளியை நேரடியாக விற்பனை செய்ய வேளாண் விற்பனை துறை மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் இருந்து ஏல விற்பனை நடந்து வருகிறது. கடந்த வாரம் 54 டன் புளி 11 லட்ச ரூபாய்க்கு விற்பனை நடந்தது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தின் போது, தர்மபுரி, தொப்பூர், ஜருகு, நவலை, ஜாலிகொட்டாய், கடத்தூர், அரூர், பென்னாகரம், மாரண்டஹள்ளி மற்றும் தர்மபுரி சுற்று வட்டார பகுதியில் இருந்து விவசாயிகள் கலந்து கொண்டு தொட்டு புளி மற்றும் தோசை புளி விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

இதில், 3 லட்ச ரூபாய்க்கு 14.7 டன் புளி விற்பனை நடந்தது. தொட்டு புளி அதிக பட்சம் 16 ரூபாய் 75 பைசாவுக்கும், குறைந்த பட்சம் 12 ரூபாய்க்கும், தோசைப்புளி அதிகப்பட்சம் 71 ரூபாய் 50 பைசாவுக்கும், குறைந்தபட்சம் 67 ரூபாய்க்கும் விற்பனை நடந்தது. கொட்டை புளி

அதிகபட்சம் 25 ரூபாய்க்கும், குறைந்த பட்சம் 20 ரூபாய்க்கும் விற்பனை நடந்தது. கடந்த வாரத்தை விட இந்த வாரம் புளி விலை கிலோவுக்கு 11 ரூபாய் குறைவாக விற்பனை நடந்தது.

**கோடை துவங்க உள்ளதால் மாடுகளின் விலை வீழ்ச்சி**

பிப்ரவரி 13,2012,12:32



கோபிசெட்டிபாளையம்:கோடை துவக்கம் காரணமாககோபி மொடச்சூர் மாட்டு சந்தையில் மாடு களில்விலை வீழ்ச்சியடைய துவங்கி உள்ளது.கோபிமொடச்சூரில் வாரந்தோறும் சனிக்கிழமை மா ட்டுசந்தை நடக்கிறது. கோபி, சத்தி உள்ளிட்ட பகுதிகளில்இருந்து ஜெர்சி,
கொங்கன் மற்றும் எருமை மாட்டில்முரா,
நாட்டு கிராஸ் ஆகிய ரகங்கள் விற்பனைக்குகொண்டு வரப்படுகின்றன.
பல்வேறு பகுதிவியாபாரிகள் மாடு வாங்கிசெல்கின்றனர்.தமிழகத்தில் ஏற்பட்டுள்ள கோடைவெயி லால் பல்வேறு பகுதிகளிலும் தீவனத்தட்டுப்பாடுஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.
மாட்டு தீவனங்களான புண்ணாக்கு, சோளம், கேழ்வரகு, புல்விலைகளும் உயர்ந்து வருகின்றன.

தீவனப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால்,
நிலம் இல்லாமல் வீடுகளில் மாடு வளர்ப்பவர்கள் தீவனம் வாங்கமுடியாமல் மாடுகளை விற்க துவ ங்கி உள்ளனர்.
நிலங்கள் வைத்துள்ளவர்கள் மட்டும் ஒரு சிலர் தங்கள்மாடுகளை பராமரிக்கின்றனர்.
கோடை நெருங்குவதால் மாடுகளின் விலை வீழ்ச்சியடைய துவங்கிஉள்ளது.சென்ற வாரம் சந்தை யில் ஜெர்சி இன மாடு, 40 ஆயிரம் முதல் 45 ஆயிரம் ரூபாய் வரை,
கன்றுகுட்டி பத்தாயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய் வரை, இறைச்சி மாடு, பத்தாயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய்விற்கப்பட்டது. கலப்பின மாடு, 15 ஆயிரம் முதல் 20 ஆயிரம் ரூபாய், கன்று குட்டி,

5,000 முதல் பத்தாயிரம்ரூபாய் வரை விற்கப்பட்டது.கொங்கன் இன மாடு, 35 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை, கன்று குட்டி10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் ரூபாய் வரை, இறைச்சி மாடு 25 ஆயிரம் முதல் 30 ஆயிரம் ரூபாய் வரை, எருமை மாடு 30 ஆயிரம் முதல் 40 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது.சென்ற சில வாரங்களுக்கு முன்மாடுகளில் விலை, 45 ஆயிரம் முதல் 50 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்பட்டது. சென்ற வாரம் விலைசரிந்தது.

---

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## தேயிலை தூள் விலை வீழ்ச்சி அடைவதால் பச்சை தேயிலை விலை சரியும் அபாயம்

*குன்னூர், பிப்.14–*

*தேயிலை தூள் விலை வீழ்ச்சி அடைந்து வருவ தால், பச்சை தேயிலை விலை சரியும் அபாயம் ஏற்பட்டுள்ளது.*

*தேயிலை விவசாயம்*

*நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசாயி கள் சுமார் ஒரு லட்சம் ஏக்க ருக்கு மேல் தேயிலை விவசா யத்தில் ஈடுபட்டு வருகின்றனர். தேயிலை பணப்பயிராக கரு தப்பட்ட காலத்தில் பச்சை தேயிலைக்கு 20 ரூபாய் வரை விலை வழங்கப்பட்டு வந் தது.*

*அதன் பிறகு தேயிலை விலை வீழ்ச்சி ஏற்பட்டதால் பச்சை தேயிலை கிலோ ஒன்றுக்கு ரூ.4.50 பைசா என கொள்முதல் செய்யப்பட்டது. இதனால் விவசாயிகளின் வாழ்க்கை தரம் பாதிக்கப்பட் டது.*

*பச்சை தேயிலைக்கு அதிகவிலை*

*தேயிலையின் விலை உயர தேயிலை வாரியம் பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டு வருகிறது. இந்த நடவடிக்கைகளில் ஒன்றாக தரமான பச்சை தேயிலைக்கு அதிக விலை என்ற திட்டம் மேற்கொள்ளப்பட்டது.*

*இதன்படி கிராமங்கள் தோறும் தேயிலை விவசாயி களுக்கு தரமான பச்சை தேயி லையை அறுவடை செய்வது குறித்து பயிற்சி முகாம் நடத்தப் பட்டது. மேலும் பச்சை தேயிலை ஏ பிரிவு, பி பிளஸ் பிரிவு, சாதா ரண வகை என்ற 3 வகைகளாக பிரிக்கப்பட் டது.*

*விலை அதிகரிப்பு*

*ஏ மற்றும் பி பிளஸ் பிரிவு களுக்கு அதிக விலை வழங்கப் பட்டு வருகிறது. இதன்படி வாரந்தோறும் சனிக்கிழமை வார விலையாக விவசாயி களுக்கு விலை வழங்கப்பட்டு வருகிறது.*

*கடந்த 11–ந் தேதி சனிக்கிழமை ஏ பிரிவு பச்சை தேயிலைக்கு 18 ரூபாய் என் றும், பி பிளஸ் பச்சை தேயி லைக்கு 17 ரூபாய் என்றும், சாதாரண வகை பச்சை தேயிலைக்கு 9 ரூபாயும் வழங் கப்பட்டது.*

*இந்த விலை கடந்த 3 வார காலமாக வழங்கப்பட்டு வரு கிறது. கடந்த மாதங்களில் தேயிலை வரத்து குறைவாக இருந்ததாலும், தேவை அதிகரித்து இருந்ததாலும் ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு விலை அதிகரித்து இருந்தது.ஆனால் கடந்த 2 வார காலமாக ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு விலை குறைவடைந்து கொண்டே வருகிறது. இந்த விலை குறைவு பச்சை தேயிலையின் வார விலையில் எதிரொலிக்க வில்லை.*

*ஆனால் வரும் வாரத்தில் தேயிலை தூளின் விலை குறைந்தால், பச்சை தேயிலையின் விலையும் குறையும் என்று விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர். இது குறித்து சிறு தேயிலை விவசாயிகள் சிலர் கூறிய தாவது:–*

*விலை வீழ்ச்சி*

*தேயிலை அன்னிய செலவாணி ஈட்டி தரும் வாணிப பொருளாக உள்ளது. இதனை கருத்தில் கொண்டு மத்தியஅரசு தேயிலை ஏற்று மதிக்கு முக்கியத்துவம் தர வேண்டும். தற்போது ஏலத்தில் பாகிஸ்தான், ரஷ்யா நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே பங்குபெற்று வருவதாக தெரி கிறது.*

*மற்ற நாடுகளிலும் இந்திய தேயிலையை வாங்க அரசு நடவடிக்கை மேற் கொள்ள வேண்டும். தொடர்ந்து ஏல மையத்தில் விலை வீழ்ச்சி இருக்குமே யானால் எதிர்வரும் வாரத்தில் பச்சை தேயிலைக்கும் விலை வீழ்ச்சி ஏற்படும் அபாயம் உள்ளது.இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.*

## நீலகிரி மாவட்ட தேயிலை விவசாயிகளுக்கு 50 லட்சம் நாற்றுக்கள் வழங்க நடவடிக்கை ஊட்டியில் நடந்த மாநாட்டில் தகவல்

*ஊட்டி, பிப்.14–*

*நீலகிரி மாவட்ட சிறு தேயிலை விவசாயி களுக்கு அடுத்த ஆண்டு 50 லட்சம் நாற்றுக்கள் வழங்கப்படும் என்று ஊட்டியில் நடந்த மாநாட்டில் தகவல் தெரிவிக்கப்பட்டது.*

*கூட்டமைப்பு உருவாக்கம்*

*நாடு முழுவதும் உள்ள சிறு தேயிலை விவசாயிகளை ஒருங்கிணைக்கும் வகையில் ‘பிஸ்டா’ என்ற சிறுவிவசாயி கள் சங்க கூட்டமைப்பு உரு வாக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பில் தமிழ்நாடு, கேரளா, மேற்குவங்கம், அசாம், திரிபுரா, அருணாசல பிரதேசம், மிசோராம் மற்றும் இமாச்சலபிரதேசம் ஆகிய மாநிலங்களை சேர்ந்த சிறு விவசாயிகள் இணைந்து உள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் கடந்த 2010–ம் ஆண்டு சிறு தேயிலை விவசாயிகள் கூட்ட மைப்பு (பிஸ்டா) உருவாக் கப்பட்டுள்ளது. இந்த கூட்ட மைப்பின் மாநாடு நேற்று ஊட்டி தோட்டக்கலை துறை வளாகத்தில் நடை பெற்றது. மாநாட்டுக்கு பிஸ்டா தலைவர் தட்டே தலைமையில் நடைபெற்றது. மாநாட்டை அசாம் சிறு விவசாய சங்கங் களின் கூட்டமைப்பின் தலைவர் அஷ்வின் போரா குத்து விளக்கு ஏற்றி தொடங்கி வைத்தார்.*

கூடுதல் விலை

மாநாட்டில் வேளாண்மை பல்கலைக்கழக நிர்வாக குழு உறுப்பினர் கே.ஆர்.அர்ஜூ ணன் கலந்து கொண்டு, பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு தேயிலை விவசா யிகளின் பச்சை தேயிலைக்கு விலை கூடுதலாக கிடைக்க தமிழக அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளுக்கு வழங்கப்பட்ட பச்சை தேயிலைக்கு முதல்– அமைச்சர் ஜெயலலிதா ரூ.2 கூடுதலாக வழங்கி இருந் தார்.

தற்போது தனியார் தேயிலை தொழிற்சாலைகளுக்கும் கூடுதலாக ரூ.2 வழங்க வேண் டும் என்று கேட்டு உள்ளனர். இது குறித்து முதல்–அமைச் சருக்கு தெரிவிக்கப்படும். நீலகிரி மாவட்டத்தில் சிறு தேயிலை விவசாயிகளுக்கு தேவையான அனைத்து உதவிகளும் தோட்டக்கலை துறை மூலம் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

50 லட்சம் நாற்றுக்கள்

நிகழ்ச்சியில் தோட்டக்கலை துறை இணை இயக்குனர் ஆல்தொரை பேசும் போது கூறியதாவது:–

இந்த ஆண்டு சிறு தேயிலை விவசாயிகளுக்கு 20 லட்சம் தேயிலை நாற்றுக்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. மேலும் அடுத்த ஆண்டு 50 லட்சம் நாற்றுக்கள் வழங்க திட்டமிடப்பட்டுள் ளது. இந்த நாற்றுக்களை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறி னார்.

தரமான தேயிலை உற்பத்தி

பிஸ்டா திட்ட இயக்குனர் சாஜி பேசும் போது, நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு விவசாயிகளிடையே இருக்கும் நிலங்கள் கூட்டு பட்டாவாக உள்ளது. இதே போல் கூடலூர் பகுதியில் தேயிலை விவசாயி களின் நிலங்கள் செக்ஷன் 17, செக்ஷன் 53 நிலங்களாக உள்ளதால், தேயிலை விவசாயிகள் உபாசி மற்றும் தேயிலை வாரியம், அரசிடம் இருந்து சலுகைகள் பெற சிரமமாக உள்ளது. எனவே சிறு விவசாயிகள் மானியம், சலுகைகளை பெற சட்டதிட்ட விதிகளை எளிமையாக்க வேண்டும். வெளிநாடுகளில் உள்ளதை போன்று தேயிலை பறிப்பதற்கும், காப்பி பறிப்பதற்கும் எந்திரங்களை பயன்படுத்த தங்களை தயார் படுத்திக்கொள்ள வேண்டும்.

மேலும் நீலகிரி தேயிலைக்கு சர்வதேச அளவில் மதிப்பு உள்ளது. ஆனால் தரமான தேயிலை தயாரிக்க அனைத்து விவசாயிகளும் அறிவியல் முறையை கையாள வேண்டும். பச்சை தேயிலை ஒரு கிலோவுக்கு ரூ.30, ரூ.18, ரூ.12 என விலை உள்ளன. தரமான தேயிலையையே உற்பத்தி செய்யும் அளவுக்கு நாம் மாற வேண்டும். விவசாயிகளாகிய நாமே, விவசாயத்தை மேம்படுத்தாவிட்டால், நாம் பாதிக்கப்படுவோம் என்று கூறினார்.

மாநாட்டில் பிஸ்டா அமைப்பின் ஊட்டி தலைவர் விஸ்வநாதன் வரவேற்று பேசினார். பிஸ்டா

*செயலா ளர்கள் ஹரிபிரசாத், ரிச்சார்ட், கேரளா விவசாயிகள் கூட்ட மைப்பு தலைவர் பீட்டர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.*

கொலக்கம்பை பகுதிகளில்

# பீன்ஸ் பயிரிடும் விவசாயிகள்

கொலக்கம்பை, பிப்.14-

கொலக்கம்பை பகுதியில் பீன்ஸ் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டுகிறார்கள்.

**விவசாய நிலங்கள்**

கொலக்கம்பை அருகே தூதூர்மட்டம், டெராமியா, கெரடாலீஸ், சட்டன், கரும் பாலம், காட்டேரி உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவு மலை தோட்ட காய்கறி விவசாய நிலங்கள் உள்ளன. இந்த பகுதியில் உள்ள விவசாயிகள் ஏற்கனவே பயிர் செய்து, இருந்த மேரக்காய் பயிர்கள் கடந்த சில வாரங்களாக தொடர்ந்து பெய்த பனியினால் முழுவதும் கருகி போனது.


இந்த நிலையில் தற்போது நிலவும் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப விளையும் பயிரான பீன்சை விவசாயம் செய்துள் ளனர். கொலக்கம்பை பகுதி யில் உள்ள பெரும் பாலான விவசாயிகள் தங்களின் நிலங் களில் பீன்ஸ் பயிரை விவசாயம் செய்து உள்ளனர்.

**2 வகை பீன்ஸ்**

இது குறித்து விவசாயி ஒருவர் கூறும் போது, ஜனவரி மாதம் கொலக்கம்பை பகுதி களில் உள்ள விவசாயிகள் தட்ப வெப்ப நிலைக்கு ஏற்றவாறு நல்ல மகசூல் தரும் பயிரான பீன்ஸ் வகைகளை பயிர் செய்துள்ளோம்.

இந்த பீன்ஸ் பயிர்கள் செடியிலும், கொடியிலும் காய்க்கும் 2 வகை பீன்ஸ்களை விவசாயம் செய்துள்ளோம். தற்போது வறட்சியான கால நிலை நிலவுவதால் போதிய நீர் இல்லாமல் நீரோடைகள் மற்றும் கிணறுகளில் உள்ள குறைந்த அளவு தண்ணீரை கொண்டு பீன்ஸ் பயிர்களை வளர்த்து வருகிறோம்.

இது சரியாக 90 நாட்களில் அறுவடைக்கு தயாராகி விடும். அறுவடை செய்யப்படும் பீன்ஸ் பயிரை மேட்டுப் பாளையம் மொத்த காய்கறி மண்டிக்கு கொண்டு சென்று விற்பனை செய்யப்படும் என்று கூறினார்.



கொலக்கம்பை பகுதியில் விவசாயிகள் பயிரிட்டுள்ள பீன்ஸ் செடிகளை படத்தில் காணலாம்.